## கம்பளை, கண்டி நகரக் காலங்கள்

01. கடலதெனியா விகாரை எக் காலத்தைச் சேர்ந்தது? கம்பளைக்காலம்
02. சத்தர்மதிலக விகாரை என அழைக்கப்படும் விகாரை எது? கடலதெனிய விகாரை
03. இவ்விகாரையானது யாருடைய தலைமையில் நிர்மாணிக்கப்பட்டது?
    சேனாதிலங்கார அமைச்சரின் தலைமையில்
04. கடலதெனிய விகாரை எம்மன்னன் காலத்தில்? யாருடைய அறிவுறுத்தலுக்கமைய நிர்மாணிக்கப்பட்டது?
    4ம் புவனேகபாகு மன்னன் காலத்தில் தம்மகித்தி தேரோவின் அறிவுறுத்தலுக்கமைய
05. கடலதெனிய விகாரையைக் கட்டியவர் யார்?
    கனேஸ்வராச்சாரியார் எனும் தென்னிந்திய கலைஞனும் அவரின் சீடர்களும்
06. கடலதெனிய விகாரையின் பகுதிகளைத் தருக?
    1ம் மண்டபம், அர்த்த மண்டபம், கர்ப்பக்கிரகம்
07. கடலதெனிய விகாரையின் மேல் தளம் எவ்வூடகத்தால் ஆனது? கருங்கல்
08. இவ்விகாரையின் கீழ்த்தளத்தில் செதுக்கப்பட்டுள்ள செதுக்கல்களைக் குறிப்பிடுக?
    நடனக்காரர், மேளக்காரர்
09. கெடிகே என்றால் என்ன?
    நாலுமுக எட்டு வெட்டுக் கொண்ட மூன்று தூண்களாலான தொகுதிகளைக் கொண்டது.
10. கடலதெனிய விகாரையின் கட்டிடங்களில் எச் செல்வாக்கைக் காணலாம்?
    தென்னிந்திய நகர இந்துக் கட்டடக்கலை செல்வாக்கு
11. கடலதெனிய விகாரையின் தூனின் அடிப்பகுதியில் உள்ள உருவம் எது?
    தலையை உயர்த்திய நிலையிலான சிங்க உருவம்
12. இவ்விகாரையின் தூணின் உச்சியில் காணப்படும் உருவம் யாது? சிங்க உருவம்
13. இவ்விகாரையின் தூணின் தண்டுப் பகுதிச் சட்டகங்களில் காணப்படும் செதுக்கல்கள் எவை?
    ரிஷபத்தில் ஏறிய மனிதவுருவம், மீன் மீது ஏறிய மனித உருவம்
14. இவ்விகாரையில் காணப்படும் பெரிய தூணுடன் சிறிய தூண்களை இணைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது எது?
    கற்பட்டி
15. தென்னிந்திய கட்டிடக்கலை மரபில் முழுவதும் கருங்கற்களினால் நிறுவப்பட்ட விகாரை எது?
    கடலதெனிய விகாரை
16.



1. இனங்காணல் :- கடலதெனிய விகாரை
2. காலம் :- கம்பளைக் காலம்
3. கட்டடத்தை நிர்மாணித்தவர் :-கனேஸ்வராச்சாரியார் அவரது சீடர்கள்
4. கட்டிடக்கலை மரபு :- தென்னிந்திய விஜய நகர நாயக்க
5. சிறப்பம்சம் :- பெரிய தூனையும் சிறிய தூனையும் இணைக்க கற்பட்டி பயன்படுத்தப்பட்டுள்ளது.

17. விஜய உத்பாயாவில் 12 அடி உயரம் கொண்ட அடித்தளத்தில் அமர்ந்த நிலையில் உள்ள புத்தர் சிலைகள் எத்தனை? நான்கு
18. இப்புத்தர் சிலைகள் எவ்வூடகத்தால் ஆனது? கல்லினால்
19. விஜய உத்பாயாவின் எட்டுத் திசைகளினை நோக்கியிருக்கும் வண்ணம் உள்ள செதுக்கல்கள் எது?

    யானை உருவங்கள்
20.



விஜய உத்பாய



21. இக் கட்டிடத்தின் மத்தியில் அமைந்துள்ளது எது?

    40 அடி உயரமான தூபி
22. இப்புத்தர் சிலைகள் எக்காலப் பண்புகளைக் கொண்டுள்ளன?

    கண்டியர் கால சிலைகளின் பண்புகளை
23. இப்புத்தர் சிலைகளின் கண்கள், காவியுடை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

    திறந்த கண்கள், அலை மடிப்புக் கொண்ட காவியுடை
24. இப்புத்தர் சிலையின் பின்புறம் காணப்படும் அலங்காரம் எது?

    அழகிய மகரதோரணம்
25. இப்புத்தர் சிலை அமர்ந்திருக்கும் நிலை எது? வீராசன நிலை
26. இப்புத்தர் சிலையின் கைகள் வெளிக்காட்டும் முத்திரை எது? தியான முத்திரை



27. இனங்காணல் :- இலங்காதிலக விகாரை
28. கலைஞர் :- ஸ்பதிராயர்
29. ஊடகம் :- செங்கல், சுண்ணச்சாந்து
30. காலம் :- கம்பளைக்காலம்
31. இது எதன் மீது நிர்மாணிக்கப்பட்டது :- பன்ஹல்கல எனும் கற்பரப்பின் மீது
32. இலங்காதிலக விகாரையை இந்தியாவைச் சேர்ந்த ஸ்பதிராயர் எனும் கலைஞர் எவ் அமைச்சரின் ஆலோசனைப்படி அமைத்தார்?

    சேனாதிலங்கார அமைச்சரின் ஆலோசனைப்படி

33. இலங்காதிலக விகாரையானது எம்மன்னன் காலத்தைச் சேர்ந்தது?
4ம் புவனேகபாகு மன்னன் காலத்தைச் சேர்ந்தது.
34. இலங்காதிலக விகாரையில் சிலைமனையுடன் இணைந்த வகையில் அமைக்கப்பட்ட ஐந்து ஆலயங்களும் எவை? வீபீஷண,உபுள்வன (விஷ்னு),கதிர்காம (முருகன்),கணதேவி (பிள்ளையார்)
35. இலங்காதிலக விகாரையின் சிலை மனையில் உள்ள அமர்ந்திருக்கும் நிலைப் புத்தர் சிலையின் கைகள் எம் முத்திரையை குறிக்கின்றது? தியான முத்திரை
36. இலங்காதிலக சிலை மனையில் உள்ள புத்தர் சிலையின் கண்கள், காவியுடை எவ்வாறு உள்ளது?
கண்கள் திறந்த நிலையில், காவியுடை அலை வடிவில்
37. இச் சிலைக்கு பின்னால் உள்ள அலங்காரம் எது?
பூவேலைப்பாடு, கொடி வேலைப்பாடு கொண்ட மகரதோரணம்
38. இலங்காதிலக விகாரையில் உள்ள ஓவியங்களைத் தருக?
சூவிசி விவரணய (24 புத்தர்), சொளொஸ்மஸ்தானய (16 புனிதஸ்தலங்கள்) சத்சத்திய (7 வாரம்), கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன், சேனாதிலங்கார அமைச்சர் உருவங்களும்
39. இலங்காதிலக விகாரையின் விதானத்தில் அமைக்கப்பட்ட எவ் அலங்காரம் பல திறனாய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது? 4 அன்னங்களின் கூட்டு
40. இலங்காதிலக விகாரை ஓவியங்கள் எப்பாரம்பரியத்தை ஒத்துள்ளன?
கண்டிக்கால ஓவியப்பாரம்பரியம்
41. எம்பக்க தேவாலயம் எங்கு அமைந்துள்ளது?
கண்டி மாவட்டத்தில் உடுநுவர மத்திய பகுதியில் திக்கெயவில் அமைந்துள்ளது.



42. மேளவாத்தியக்காரன் கண்ட கனவு ஒன்றின் பிரதிபலனாக கதிர்காமக் கடவுளுக்காக அர்பணிக்க நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் எது?
எம்பக்க தேவாலயம்
43. எம்பக்க தேவாலயம் எக்காலத்தில் எத்தனையாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது?
கம்பளைக்காலத்தில் 19ம் நூற்றாண்டில்
44. எம்பக்க தேவாலயம் எம்மன்னன் காலத்தில் யாரால் நிர்மாணிக்கப்பட்டது?
3ம் விக்கிரமபாகு மன்னன் காலத்தில் தெல்மட மூலாச்சாரி உட்பட அவரது சீடர்களால் நிர்மாணிக்கப்பட்டது.
45. இலங்கையில் காணப்படும் மரச் செதுக்கல் வேலைப்பாட்டிற்கு பிரசித்தி பெற்ற இடம் எது?
எம்பக்க தேவாலயம்
46. எம்பக்க தேவாலய கூரையில் 26 கை மரங்கள் ஒரு பலகை ஆணியுடன் பொருத்தப்பட்டுள்ளதை எவ்வாறு அழைப்பார்?
மடோல் குரும்பாவ

47. எம்பக்க தேவாலயத்தில் காணக்கூடிய பிரதான கட்டிட அமைப்புக்களைத் தருக?
வாயில் மண்டபம், நீள் மண்டபம், கர்ப்பக்கிரகம்

48. இங்குள்ள வாயில் மண்டபத்தில் உள்ள தூண்கள் எத்தனை? அதில் உள்ள செதுக்கல்கள் எத்தனை?
10 தூண்கள், 40 செதுக்கல்கள்

49. இங்குள்ள நீள்மண்டபத்தில் உள்ள தூண்கள் எத்தனை? அதில் உள்ள செதுக்கல்கள் எத்தனை?
32 தூண்கள் 128 செதுக்கல்கள்

50. எம்பக்க தேவாலய செதுக்கல்கள் ஆக்கப்பட்ட மர வகை எது?
வேங்கை, சித்திரவேம்பு, கம்மாலு

51. எம்பக்க தேவாலய செதுக்கல்களின் பிரதான கருப்பொருட்கள் எத்தனை? அவை எவை?
5

1. கற்பனை விலங்குருவங்கள்
2. விலங்குருவங்கள்
3. மனித வாழ்க்கையுடன் தொடர்புபட்ட செதுக்கல்கள்
4. கரை அலங்காரம்
5. பூக்கள், கொடிகள் அலங்காரம்

52. இங்கு காணப்படும் சிற்பங்கள் எவ்வூடகத்தால் ஆனவை?
மரத்தால்

53. இங்கு காணப்படும் கற்பனைப் பிராணி, பிராணி ஆக்கங்களைத் தருக?
பேருண்ட பட்சி - இருதலைப்பட்சி, யானைப்பட்சி – ஏத்ஹந்த லிகினியா
செரப்பெண்டிய , கஜசிங்கம், ரிஷப குஞ்சரம், கின்னரப் பெண்கள், நாரிலதா










54. எம்பக்க தேவாலயத்தில் காணப்படும் சமகால சமூக வாழ்கை நிகழ்வுகளைக் குறிக்கும் சிற்பங்களைத் தருக?

றபான் இசைப்பவர்

குதிரை வீரன்

போர் வீரன்

மல்யுத்தம்

நடனமாது

குழந்தைக்கு பாலூட்டும் தாய்








55. எம்பக்க தேவாலயத்தில் காணப்படும் கரை அலங்கார வேலைப்பாடுகளைத் தருக?

உயிரற்றவை (நிர்ஜீவ) – கல்பிந்து, அரும்பு, குந்திரிக்கம்

தாவர வகை (உத்பீத, விருட்ஷ) – பிறை மலர், பூங்கொடி

56. கண்டிய காலத்து சிறப்பான ஓவியங்கள் உள்ள குகை விகாரை வகையைச் சேர்ந்த விகாரை எது?

தெகல் தொறுவ ரஜ மகா விகாரை

57. இவ்விகாரையைக் கட்டியவர் யார்?

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் (கி.பி 1797 – 1782)

58. இங்குள்ள ஓவியங்களை வரைந்தவர் யார்? இவருக்கு உதவியவர்கள் யார்?

வரைந்தவர் - கலைஞர் தெவரகம்பல சில்வத்தன

உதவியவர்கள் - கொஸ்வத்தே சித்தர நைதேயும், நீலகம பட்டபெந்தியும்

59. தெகல்தொறுவ விகாரையில் கர்ப்பக்கிரகத்தினுள் நுழையும் வாயிலின் புறத்திலுள்ள பட்டிகளில் வரையப்பட்ட ஜாதகக் கதைகளைத் தருக?

வெஸ்ஸந்தர ஜாதகக் கதை , சுத்த சோம ஜாதகக் கதை

60. தெகல்தொறுவாவில் உள்ள வெஸ்ஸந்தர ஜாதகக் கதையிலுள்ள ஓவியத்தினை தருக?

யானைகள் தானம் செய்தல்

63. தெகல்தொறுவ ஓவியங்களில் காணப்படும் சிறப்பியல்புகளைத் தருக?

1. பட்டிகளில் (வரிசை ) கதைத் தொடர்ச்சியாக சித்தரித்தலும், பக்கத்தோற்ற இயல்பும்
2. இருபரிமாண இயல்புடன் தட்டை வர்ணப்பயன்பாடு
3. உருவங்களைச் சூழ நுணுக்கமான கோடுகள்
4. தூரக்காட்சி, அளவுத்திட்டம் கவனத்தில் கொள்ளப்படாமை

64. தெகல்தொறுவ ஓவியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்களைத் தருக? பின்னணி எவ் வர்ணங்களால் ஆனது?

மஞ்சல், பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை

பின்னணி - இருண்ட சிவப்பு நிறம்

65. தெகல் தொறுவாவில் உள்ள ஓவியங்களில் பயன்படுத்தப்பட்ட நுட்ப முறைகளைத் தருக?
டெம்பரா பிரஸ்கோ நுட்ப முறை

66. தெகல் தொறுவாவில் வரையப்பட்ட ஓவியங்களில் உள்ள பின்னணி இடைவெளிகளை நிரப்புவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது எது?
வெவ்வேறு அலங்கார வடிவமைப்புக்கள்

67. இவ்விகாரையின் விதானத்தில் வரையப்பட்ட சமூக வெளிப்பாட்டைக் கொண்ட ஓவியம் எது?
மாற பராஜய ( மாறனைத் தோற்கடித்தல் )

68. அனேக பௌத்த விகாரையில் மாரபராஜய என்ற ஓவியம் வரையப்பட்டிருந்தாலும் தெகல் தொறுவாவில் வரையப்பட்டுள்ள மாரபராஜய ஓவியத்தில் காணப்படும் சிறப்பு யாது?
மாரனின் ஆட்கள் கையில் துப்பாக்கியுடன் காணபப்படுதல்

69.



இனங்காணல் :- தெகல் தொறுவ விகாரை

70.



1. இனங்காணல் :- மாறனைத் தோற்கடித்தல்
2. கலைஞன் :- தெவரகம்பொல சில்வத்தன.
3. காணப்படும் விகாரை :- தெகல் தொறுவ ரஜமகா விகாரை
4. வர்ணப்பிரயோகம :- மஞ்சள், பச்சை, சிவப்பு, கறுப்பு
5. சிறப்பம்சம் :- ஓவியத்தில் கையில் துவக்கு ஏந்திய மாறனின் தரப்பினர் காணப்படுதல்

71.



1. இனங்காணல் :- யானைகளைத் தானம் செய்தல்
1. ஜாதகக் கதை :- வெஸ்ஸந்தர ஜாதகக்கதை
2. காணப்படும் விகாரை :- தெகல் தொறுவ ரஜமகா விகாரை
3. வர்ணப்பிரயோகம் :- மஞ்சள், பச்சை, சிவப்பு, , வெள்ளை
4. கலைஞன் :- தெவரகம்பொல சில்வத்தன

72. கூரைச் சித்திரங்களுக்கு இலங்கையில் புகழ் பெற்ற குகை விகாரை எது? தம்புள்ள

73. தம்புள்ள விகாரை எத்தனையாம் நூற்றாண்டிற்குரியது? கி.மு 1ம் நூற்றாண்டு

74. இவ்விகாரையைக் கட்டியவர் யார்? வலகம்பா மன்னன் ( வட்டகாமினி அபய)

75. இவ்விகாரையானது ஐந்து பெரும் கற்குகைகளைக் கொண்டமைந்துள்ளது அவை எவை?

1. தேவ ராஜ விகாரை
2. மகா ராஜ விகாரை
3. மகா புதிய விகாரை
4. பின் விகாரை
5. இரண்டாம் புதிய விகாரை

75. தம்புள்ள விகாரை ஓவியங்களை வரைந்தவர் யார்?
நீலகம பரம்பரையைச் சார்ந்த துறவிகள்
76. தம்புள்ள விகாரையில் மகாராஜ குகையில் காணப்படும் சிலைகளைத் தருக?
புத்தரின் சிலைகள், அரசர்களின் சிலைகள்
77. தம்புள்ள விகாரை ஓவியங்களின் வகைகளைக் குறிப்பிடுக?
1. போதிசத்தவரின் வாழ்க்கைக் கட்டங்கள்
2. புத்தரின் வாழ்க்கைக் கட்டங்கள்
3. வரலாற்று நிகழ்வுகள்
78. இவ்விகாரையில் உள்ள போதிசத்வரின் வாழ்க்கைக் கட்டங்களைக் குறிக்கும் ஓவியங்களைத் தருக? இருபத்தெட்டு விவரணங்கள் ( சூவிசி விவரணய)
79. இவ்விகாரையில் புத்தரின் வாழ்க்கைக் கட்டங்களைக் குறிக்கும் ஓவியங்களைத் தருக?
மாறனைத் தோற்கடித்தல் (மாரபராஜய)
பொற்காசுகள் பரப்பி ஜேதவனத்தை பூசையாக வழங்கல்
80. இவ்விகாரையில் வரலாற்று நிகழ்வுகளை குறிக்கும் ஓவியங்களைத் தருக?
விஜயனின் வருகை, மகிந்தரின் வருகை
ஸ்ரீ மகா போதிக்கிளை ( வெள்ளரசுக்கிளை )கொண்டு வருதல்
எல்லாளன் துட்டகைமுனு யுத்தம்
81. தம்புள்ள விகாரையின் ஓவியங்களின் படைப்புக்களின் சிறப்பியல்புகளைத் தருக?
பக்கததோற்ற உருவங்கள் , இருபரிமான இயல்பு
தட்டையான வர்ணப்பயன்பாடு , நுனுக்கமான கோடுகள்
அளவுத்திட்டம், தூரதரிசன விதிமுறைகள் கவனத்தில் கொள்ளப்படாமை
82. தம்புள்ள விகாரை ஓவியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்களைக் குறிப்பிடுக?
மஞ்சல், பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை
83. தம்புள்ள விகாரை ஓவியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள நுட்ப முறைகளைத் தருக?
பிரஸ்கோ சிக்கோ நுட்பமுறை

84. 

இனங்காணல் :- மாறபராஜய
அமைந்துள்ள இடம் :- தம்புள்ள விகாரை
வர்ணப்பயன்பாடு :- மஞ்சல், பச்சை, சிவப்பு, கறுப்பு,
கையில் உள்ள முத்திரை :- பூமிபரிச முத்திரை


சிறப்பம்சம் :- ஒரு புறம் மாறனின் புதல்விகளில் மூவரும் மாறனின் சேனையும் காட்டப்பட்டுள்ளது.

85. பின்வரும் படங்களை இனங்கண்டு பெயரிடுக.





……………………………….. ……………………………. …………………………….

……………………………….. ………………………………..

86. கண்டிய காலத்திற்குரிய புனித தந்த ஆலயம் என சிறப்பிக்கப்படும் பௌத்த ஆலயம் எது?
தலதா மாளிகை

87. இலங்கை பௌத்த மக்களின் வழிபாட்டிடமாகக் காணப்படும் தலதா மாளிகையை கட்டடியெழுப்பியவர்?
2ம் விமலதர்ம சூரியன் ( கி.பி 1687 – 1707)

88. தலதா மாளிகையானது வாஸ்து முறைப்படி கட்டப்பட்டது இக்கட்டிடத்தின் பிரிவுகளைத் தருக?



1. தலதா மண்டபம்
2. சபா மண்டபம் ( மகுல் மடுவ)
3. எண்கோண மண்டபம் ( பத்திரிப்பு)
4. நீராடும் இடம் ( உல்பென்கெய)
5. அரசர் ஓய்வு மண்டபம் (தியக்கதிலக்க)
6. பிரதாணிகள் மண்டபம்

89. தலதா மாளிகையில் எண்கோண மண்டபத்தை அமைத்தவர்?
தேவேந்திர மூலாச்சாரி

90. கண்டிக் காலத்திற்குரிய மிகச் சிறப்பான சந்திரவட்டக்கல் எங்கு அமைந்துள்ளது?
தலதா மாளிகையில்

91. இச்சந்திரவட்டக்கல்லில் காணப்படும் அலங்காரங்களைத் தருக? தாமரை மலரும் இரு புறத்தில் பூங்கொடி அலங்காரங்களும்

92. தலதா மாளிகையில் காணப்படும் நாட்டிய ஓவியங்கள் எம்மரபைச் சார்ந்தது? கண்டி மரபை

93. இவற்றில் காணப்படும் சிறப்பம்சங்களைத் தருக?
தாவர இலை, பூ அலங்காரங்கள், கற்பனை உருவங்கள்

94. கற்தூண்களின் மீது அமைக்கப்பட்ட விகாரை எது? மெதவெல

95. மெதவெல விகாரை எங்கு அமைந்துள்ளது?
கண்டிக்கு அண்மித்த மெதவெல எனும் கிராமத்தில்

96. இவ்விகாரையின் உயரத்தினைத் தருக? 1அடி 8 அங்குலம்

97. மெதவெல விகாரையானது அமைந்துள்ள கற்தூண்கள் எத்தனை? 34 கற்தூண்கள்

98. இவ்விகாரையில் காணப்படும் ஓவியங்களைத் தருக?
ஜாதகக் கதைகள் சத்சத்திய (ஏழு வாரங்கள்)

99 .இவ்விகாரையில் காணப்படும் ஓவியங்கள் எப் பாரம்பரியத்தைச் சேர்ந்தது?
மத்திய கண்டிய பாரம்பரியம்

100. இங்குள்ள ஓவியங்களின் சிறப்பியல்புகளைத் தருக?

| | |
|---|---|
| பக்கப்பார்வை உருவங்கள் | சிறுபட்டிற்குள் ஓவியம் காணப்படுதல் |
| கதை தொடர்ச்சியாகக் காணப்படல் | இருபரிமாணம், தட்டை வர்ணப்பயன்பாடு |
| நுணுக்கமான கோடுகள் | இடை வெளி நிரப்ப அலங்காரங்கள் |

101. இங்குள்ள ஓவியங்களிற்கு பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்களைத் தருக?
மஞ்சள், பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை

102. மெதவெல விகாரை ஓவியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள நுட்ப முறையைத் தருக?
டெம்பரா பிரெஸ்கோ

103. இங்குள்ள ஓவியங்களின் பின்னணிக்கு பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்களைத் தருக?
பழுப்பு நிறம்

104. மெதவெல விகாரையில் ஓவியங்களின் இடைவெளிகளை நிரப்புவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது எது?
வெவ்வேறு அலங்கார வடிவமைப்புக்கள்

105. மெதவெல விகாரை ஓவியத்தினுள் கவனத்தில் கொள்ளப்படாத விடயங்களைத் தருக?
அளவுத்திட்டம் தூரதரிசன விதிமுறைகள்

106.



இனங்காணல் :- மெதவெல விகாரை
அமைந்துள்ள இடம் :- கண்டிக்கு அண்மித்துள்ள மெதவெல
உயரம் :- 1அடி 8 அங்குலம்
தூண்களால் எத்தனை :- 34
இங்குள்ள ஓவியங்கள் :- ஜாதகக் கதைகள், சத்சத்திய ( ஏழு வாரங்கள் )

107. கண்டிக் காலத்து தாழ்நிலப் பிரதேசத்து சித்திரக் கலைப்பண்புகளைக் கொண்ட சுவரோவியங்களை நாட்டின் எப்பிரதேசங்களில் காணலாம்?

மேற்கு, தெற்கு கரையோரப் பிரதேசங்களில்

108. மேற்கத்தேயரின் கலாசாரப் பண்புகளைக் கொண்டதாக கண்டிக் காலத்து சித்திரக்கலைப்பாணியில் மாற்றம் ஏற்படக் காரணம்?

கி.பி 16ம் நூற்றாண்டுக்குப் பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களின்வருகையின் காரணமாக மாற்றம் ஏற்பட்டது.

109. 19ம் நூற்றாண்டின் இறுதியில் தாழ்நிலப்பிரதேசங்களில் பிரபல்யமாக பரவலடைந்த ஓவியப்பாணி?

வெளிநாட்டவர்களின் செல்வாக்கையும், சமூகப் பின்னணியின் தாக்கமும் காணப்படுகின்றது.

110. தாழ்நிலப்பிரதேசத்தில் விகாரை ஓவியங்கள் மீது வரையப்பட்டுள்ள நுட்ப முறைகளைத் தருக? உலர்ந்த சார்ந்து மீது வரையும் நுட்பம்

111. தாழ்நிலப்பிரதேசத்தில் வரையப்பட்ட ஓவியங்களின் கருப்பொருளாக அமைந்தவை எவை?

பௌத்த சமய நிகழ்வுகளும், பௌத்த ஜாதகக் கதைகளும்

112. தாழ்நாட்டு பிரதேசத்து விகாரை ஓவியங்களில் காணப்படும் பொதுப் பண்புகள்

நிரைகளாக வரைந்திருத்தல், தொடர்ச்சியான கதை வெளிப்படுதல்

ஒரு பக்கம் திரும்பிய உருவங்கள், அளவுத்திட்டம் கவணிக்கப்படாமை

தூரதரிசன, முப்பரிமான இயல்பு காட்ட முற்பட்டிருத்தல்

113. தாழ்நாட்டு பிரதேசத்து விகாரை ஓவியங்களில் பின்னணியை அலங்கரிப்பதற்கு பயன்படுத்தியவை?

பல வித அலங்கார வடிவங்கள்

114. இங்குள்ள ஓவியங்களில் பயன்படுத்தியுள்ள வர்ணங்களைக் குறிப்பிடுக?

மஞ்சள், நீலம், நரைப்பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை

115. இங்குள்ள ஓவியங்களின் பின்னணிக்கு பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்களைத் தருக?

சிவப்பு வர்ணத்தை விட சாம்பல், கறுப்பு, கடும் நீலம்

116. தென்மாகாணத்தின் காலி நகருக்கு அண்மித்துள்ள கத்தளுவ விகாரையின் சுவரோவியங்கள் எத்தனையாம் நூற்றாண்டைச் சேர்ந்தது?

19ம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியைச் ( 1886) சேர்ந்தது

117. கத்தளுவ விகாரை ஓவியங்களை வரைந்தவர் யார்?

கடொல்கல்கே மகா சித்தரா (சிறிய சித்தரா) வும் பொட்ட சித்தராவும்

118. கத்தளுவ விகாரையில் உள்ள ஓவியங்களின் தொணிப்பொருளாக அமைந்த விடயங்களைத் தருக?

பௌத்த ஜாதகக் கதைகள் ( வெஸ்ஸந்தர, மகா சுத்த சோம, தேமிய, சுள்ளபதும)

புத்த பெருமான் காலத்தில் சமகால சமூக நிகழ்வுகள்

(மகாதன செல்வந்தரின் கதை, பட்டாசாரா கதை, நந்திய பக்தனின் கதை)

நரகக் காட்சிகள், இருபத்து நான்கு காட்சி (சூவிசிவிவரணய)

உட்கூரை ஓவியங்கள

119.



1. இனங்காணல் :- மகாதன செல்வந்தரின் கதைஇசையும்களிப்பும்
2. வரையப்பட்டுள்ள விகாரை :- கத்தளுவ விகாரை
3. வர்ணங்கள் :- மஞ்சல், கறுப்பு, வெள்ளை, சிவப்பு, பச்சை, கபிலம்
4. ஆடை :- ஐரோப்பிய முறையில் உள்ளது.
5. கலைஞர் :- கடொல்கல்கே மகா சித்தரா (சிறிய சித்தரா) வும் பொட்ட சித்தராவும்

120. கத்தளுவ விகாரை சுவரோவியங்களில் சுத்தசோம ஜாதகக் கதை ஓவியத்தினைத் தருக?
அரண்மனையில் மாதர்கள்

121. இவ்வோவியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்களைத் தருக?
மஞ்சள், கறுப்பு, வெள்ளை, நீலம், சிவப்பு, பச்சை, கபிலம்

122. இவ்வோவியத்தின் பின்னிக்கு பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணத்தைத் தருக?
கறுப்பு

123.



1. இனங்காணல் :- அரண்மனை மாதர்கள்
2. கலைஞர் :- கடொல்கல்கே மகா சித்தரா (சிறியசித்தரா) வும்பொட்ட சித்தராவும்
3. எங்குள்ளது :- கத்தளுவ விகாரை
4. சிறப்பு பண்பு :- பின்னணிக்கு அலங்கரிப்பு பண்புகள்காணப்படல்
5. ஆடை அமைப்பு :- ஐரோப்பிய முறையில் உள்ளது.

124. கரகம்பிட்டிய சுபோதாராமய விகாரை எங்குள்ளது?
மேல்மாகாணத்தில் தெகிவளை நகருக்கு அண்மையில்

125. இவ்விகாரை எக்காலத்திற்குரியது?
பொலநறுவைக்கால 1ம் பராக்கரமபாகுவினதும், கண்டிக்கால ராஜாதி ராஜசிங்க அரசன் (1795) காலத்துக்கும் உரியது.

126. இங்குள்ள ஓவியங்கள் எத்தனையாம் நூற்றாண்டிற்குரியது?
19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியை ( கி.பி1897)

127. கரகம்பிட்டிய சுபோதாராமைய விகாரைச் சுவரோவியங்களைத் தருக?

பௌத்த ஜாதகக் கதைகள், புத்தரின் வாழ்க்கை அம்சங்கள்
நரகலோகக் காட்சிகள், சூவிசி விவரணய
சுவர்க்கலோகக் காட்சிகள்

128. கரகம்பிட்டிய ஓவியங்களின் விசேட பண்புகளைத் தருக?

இயற்கைப் பொருட்களைக் காட்ட முப்பரிமாணத்தன்மை கொண்ட வர்ணங்களை உபயோகித்தல்

முகில்கள், நீர் என்பன காட்ட இன்டிகோ (கருநீலம் ) உபயோகித்திருந்ததோடு நீலம், வெள்ளை, கறுப்பு வர்ணங்கள் கலந்து முப்பரிமாணம் காட்டப்பட்டது.

129. இவ்விகாரை ஓவியங்களுக்கு பயன்படுத்தப்பட்ட வர்ணங்களைத் தருக?

கடும் சிவப்பு, கடும் பச்சை, கறுப்பு, கபில நிறம்

130. தூண்டுதல் ( மாரன் புதல்வியர் ) எனும் ஓவியம் எவ்விகாரையில உள்ளது?

கரகம்பிட்டிய விகாரையில்

131. கரகம்பிட்டிய விகாரையில் காணப்படும் தூண்டுதல் எனும் ஓவியத்தில் புத்தர்நிலை அடைவதை தடுக்கும் வகையில் தூண்டுவதற்காக வந்த மாறனின் புதல்வியர்களைக் குறிப்பிடுக?

போராசை, காதல், காமம் ஆகியோர்

132.



1. இனங்கானல் :- தூண்டுதல் (மாரன் புதல்வியர் ) எனும் ஓவியம்
2. கருப்பொருள் :- மாரன் மகள் புத்தர்நிலை அடைவதை தடுப்பத களியாட்டக் காட்சி காண்பிக்கப்பட்டுள்ளது.
3. எங்கு அமைந்துள்ளது :- கரகம்பிட்டிய விகாரையில்
4. வர்ணங்கள் :- மஞ்சள், கறுப்பு, வெள்ளை, நீலம், சிவப்பு நிறம்
5. ஆடையணிகள் செல்வாக்கு :- ஐரோப்பிய செல்வாக்கு

135.



1. இனங்கானல் :- சித்தார்த்தரின் பிறப்பு
2. எங்குள்ளது :- கரகம்பிட்டிய விகாரையில் லும்மின் நாகலிங்கப் பூங்காவில்
3. வர்ணங்கள் :- மஞ்சள், கறுப்பு, சிவப்பு, செம்மஞ்சள், நீலம்,
4. நுட்பமுறை :- முப்பரிமாண இயல்பு காட்டப்பட்டுள்ளது.
5. பின்னணி வர்ணம் :- நீலம், கறுப்பு